நகல்

9.10.1899 தி. த. கனகசுந்தரம்

நகல் - 1

1/30 ஆயலூர் முத்தையமுதலி
தெரு, சென்னை.
அக்டோபர் மீ 9-1899.

ஐய,

தாங்கள் இரண்டாந்தேதி எழுதிய கார்ட்டும் குறுந்தொகைப் பிரதியும் கிடைத்தன. குறுந்தொகைப் பிரதிக்காக மிகவும் வந்தனம் சொல்லுகின்றேன். அதனைக் கூடிய சீக்கிரத்தில் அனுப்பிவைக்கின்றேன். தங்களிடத்திலாவது தங்கள் நண்பர்களிடத்திலாவது வேறு குறுந்தொகைப் பிரதி உளவோ? உளவாயின் அதனைத் தெரிவித்தால் மிக உபகாரமாயிருக்கும். அவைகளையனுப்பச் சொல்லி நான் கேட்கவில்லை. இருப்பது தெரிந்தால் எனது பரிசோதனையில் நிகழும் ஐயங்களை யறுப்பதற்கு அவைகளை நேரில் போய்ப் பார்த்துக் கொள்ளலாமென்பது எனது எண்ணம். தாங்கள் சென்னைக்கு வந்திருந்தது தெரிந்திருந்தால் யான் பார்த்திருப்பேன். பார்க்காமற் போய்விட்டேனே என்பது துக்கமாயிருக்கின்றது. பிரதி தங்களிடம் சாக்கிரதையாய் வந்து சேரும்படி யனுப்பிவைப்பேன்.

இங்ஙனம்,
தங்களன்பன்.
தி. த. கனகசுந்தரம்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு யார் யார் உரை செய்திருக்கிறார்கள்? நச்சினார்க்கினியருரையன்றி மற்றையோருரை தாங்கள் கண்டிருக்கின்றீர்களோ? பேராசிரியருரை யெப்போதகப்படுமோ? தாங்கள் தென்தேசத்தில் பார்த்த இடங்களிலோரிடத்தும் காணவில்லையோ? இது அறிய விரும்புகிறேன்.

தி. த. க.

நகல்

copied 88

தி.த. கனகசுந்தரம். சென்னை
9-10-1899

உ

இருந்தொகைப் பாதி
அனுப்பியதற்கு நன்றி

K H 68-69

(96)

நகல்

9.10.1899 தி.த. கனகசுந்தரம்

அசல் - 1



நகல்

9.10.1899 தி.த. கனகசுந்தரம்

நகல் 1

